# தமிழ்நாடு அரசு
## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

*பிரிவு* : TNPSC Group I தேர்வு

*பாடம்* : *புவியியல்*

*பகுதி* : **இயற்கை தாவரத் தொகுதிகள், காடுகள், வனவிலங்குகள்**

**காப்புரிமை**

*தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப்-1 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.*

*எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.*

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# இயற்கை தாவரத் தொகுதிகள்

# இந்தியா – உயிரின வளங்கள்

### உயிரின வளங்கள்

- உயிர் கோளத்திினின்று பெறப்படுபவை, உயிரின வளங்கள் எனப்படும். காடுகளிலிருந்து பெறப்படும் பயன்பாட்டு பொருட்கள், விலங்கினம் மற்றும் பறவையினித்திலிருந்து பெறப்படும் பொருட்கள் மற்றும் பிற கடல்வாழ் உயிரினங்களை இவற்றிற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

### வன உயிரிகள்

- இயற்கை வாழிடத்தில் காணப்படும், வீட்டில் பழக்கப்படாத மற்றும் வளர்க்கப்ப படாத உயிர்கள், வன உயிரிகளாகும்.

### பாதுகாப்பிற்கான தேவை

- வன உயிரிகள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டிய சொத்தாகும். அறிவியல் படைப்பின் அடிப்படையில் மிக முக்கிய மானதாகும்.
- காலநிலை சமநிலை ஏற்படக் காரண மானவை.
- மருத்துவ குணம் கொண்ட தாவரங்கள் அதிகம் கிடைக்கும்.
- சுற்றுலாவிற்குப் பெரிய முன்னேற்றத்தை ஏற்படுத்தித் தருகிறது.
- மழை அளவு குறைவதை தடுப்பதற் காகவும் விளங்குகிறது.
- தட்ப வெப்பநிலை மாற்றம்.
- மண் அரிப்பதைத் தடுத்தல்
- பூமிப்பந்து சூடாதலை தடுத்தல், (பசுமை வீட்டு விளைவு)
- பாலைவனத்தில் காற்றின் வேகம் அதிகமாதல்

### காடுகள் பெருக்கல்

- புதிய மரங்களை நட்டு காடுகளின் பரப்பளவை பெரிதாக்குவது காடாக்கல் எனப்படும்.
- இந்தியாவில் பல்வேறு விதமான உபயோகங்களுக்கு காடுகளில் இருந்து பெறப்படும் பொருட்கள் ஒரு அங்கமாக விளங்குகிறது. மேலும் பஞ்சத்தைத் தவிர்த்து பசுமையை ஏற்படுத்தி அனைவரும் வாழ வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் சமுதாயக் காடுகள் திட்டம் கொண்டுவரப்பட்டது.

#### சமுதாயக் காடுகள் திட்டம் (1976)

- இயற்கைக் காடுகளை மேம்படுத்துவது மற்றும் பயன்படுத்தப்படாத நிலங்களில் காடுகளை உருவாக்குவது ஆகும். இதனால் கட்டுமானத்திற்காகவும், தீவன தேவைக்காகவும் எரிபொருளுக்காகவும் பாரம்பரியக் காடுகள் வெட்டப்படுவது தவிர்க்கப்படுகின்றது.




இந்தியாவின் காணப்படும் உயிரின வளங்கள்

### வேளாண் காடுகள்

- விவசாயப் பயிர்களோடு இணைந்து வேளாண் நிலங்களின் எல்லைகளிலும், தனியார் நிலங்களின் ஓரங்களிலும், மரம் நடுவதே, வேளாண் காடுகள் திட்டம் ஆகும்.

### காடுகள் அழிதல்

- உலகில் பெருகிவரும் மக்கள்தொகைப் பெருக்கத்தினால் மனிதனின் வாழிடத் தேவைக்காக காடுகள் அழிக்கப் படுகின்றன. சில சமூக விரோதிகள் இயற்கை வளத்தை சீர்குலைக் கின்றனர்.




**முக்கியத் திட்டங்கள்**

| | |
|---|---|
| சிங்கம் பாதுகாப்புத் திட்டம் | 1972 |
| புலிகள் பாதுகாப்புத் திட்டம் | 1973 |
| முதலை பாதுகாப்புத் திட்டம் | 1975 |
| கரடிகள் பாதுகாப்புத் திட்டம் | 1977 |
| காண்டாமிருகம் பாதுகாப்புத் திட்டம் | 1987 |
| யானைகள் பாதுகாப்புத் திட்டம் | 1992 |
| கழுகுகள் பாதுகாப்புத் திட்டம் | 2006 |

**இந்தியாவில் உள்ள தாவரங்களின் எண்ணிக்கை**

இந்தியத் தாவரங்களில் 8 பிரிவுகளில் 45000 சிற்றினங்கள் உள்ளன.

| | |
|---|---|
| பூக்கும் தாவரம் | 15000 |
| பாசி தாவரம் | 1676 |
| படர் தாவரம் | 1940 |
| பூஞ்சை தாவரம் | 12480 |
| பிரியோபைட்டுகள் | 2813 |
| டெரியோபைட்டுகள் | 1012 |

**இந்தியாவில் உள்ள விலங்குகளின் எண்ணிக்கை**

மொத்தம் 81, 251 சிற்றினங்கள் உள்ளது. இது உலகளவில் சதவீதம் 6.67% ஆகும்.

| | |
|---|---|
| பூச்சிகள் | 60,000 |
| மெல்லுடலிகள் | 5000 |
| பாலூட்டிகள் | 372 |
| பறவைகள் | 1228 |
| ஊர்வன | 446 |
| இருவாழ்விகள் | 204 |
| மீன்கள் | 2546 |

### சரணாலயங்கள்

- இவை விலங்குகளைக் கொல்வதோ, வேட்டையாடுவதோ அல்லது பிடிக்கவோ தடை செய்யப்பட்ட மற்றும் ஒரு தகுதி வாய்ந்த நிறுவனத்தினரால் பாதுகாக்கப்பட்ட இயற்கை சூழல் ஆகும். இதனால் அழிவின் விளிம்பில் உள்ள வன உயிரிகளை மீண்டும் மீளச் செய்ய முடிகின்றது.

இந்தியாவின் தேசிய விலங்கு வங்காள புலி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதன் அறிவியல் பெயர் - "பாந்தேரா டைக்ரிஸ்" (Panthera Tigris)
இந்தியாவின் சிறப்பு விலங்கு யானை ஆகும். இவ்விலங்கின் அறிவியல் பெயர் "எலிபென்டையாசிஸ் மேக்சிமஸ்" (Elephentiasis Maximus).

### தேசிய பூங்காவிற்கும், வனவிலங்கு சரணாலயத்திற்கும் உள்ள வேறுபாடுகள்:

| **தேசிய பூங்கா** (National Park) | **வனவிலங்கு சரணாலயம்** (Wildlife Sanctuary) |
|---|---|
| தேசியப் பூங்காக்கள் என்பது குறிப்பிட்ட நிலப்பரப்பில் உள்ள பலதரப்பட்ட தாவரங்களையும், விலங்குகளையும் பாதுகாப்பது. | அழிந்து வரும் அல்லது அருகிவரும் குறிப்பிட்ட வனவிலங்குகளை பாதுகாப்பதற்காக நிர்மாணிப்பது. |
| மேய்ச்சல் உள்ளிட்ட எந்த ஒரு மனித செயல்பாட்டிற்கு அனுமதி கிடையாது. | மேய்ச்சல் மற்றும் விறகு சேகரித்தல் தவிர மற்ற செயல்பாடுகளுக்குத் தடை விதிக்கப்படும். |
| இந்தியாவில் உள்ள மொத்தத் தேசிய பூங்காக்களின் எண்ணிக்கை | குறிப்பிட்ட வன விலங்குகள் சரணாலயத்தை தேசியப் பூங்காவாக மாற்ற முடியும். |
| இந்தியாவில் உள்ள மொத்த தேசியப் பூங்காக்களின் எண்ணிக்கை - 103. | இந்தியாவில் உள்ள மொத்த வன விலங்கு சரணாலயத்தின் எண்ணிக்கை - 537 |

### உயிர்க்கோள காப்பகம் (Blosphere Reserve)

- உயிர்கோள காப்பகம் என்பது ஒரு பாதுகாக்கப்பட்ட பிரத்தியோக புவிப் பகுதிகளின் உலகளாவிய வலை அமைப்பாகும்.
- இவ்வமைப்பு பாதுகாப்பு முறைக்கும், முன்னேற்றத்திற்கும் உண்டான தொடர்பினை செயல்முறையில் நிரூபணம் செய்கின்றது.
- இவ்வமைப்பின் மாதிரி செயல்பாடு பகுதிகளைக் கொண்டது.

1. நன்கு பாதுகாக்கப்பட்ட மையப்பகுதி,
2. கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக்காக பயன்படுத்தப்படும் மாற்றமடையும் வெளிப்பகுதி.

தமிழ்நாடு உயிர்க்கோள காப்பகம்

தமிழ்நாட்டில் மூன்று உயிர்கோள காப்பகங்கள் உள்ளன. அவை,

1. நீலகிரி 2. மன்னார் வளைகுடா
3. அகஸ்திய மலை

**மனிதன் மற்றும் உயிர்கோள காப்பகம்: (Man and Blosphere - MAB)**

- இந்தியாவில் மொத்தம் 18 உயிர் கோள காப்பகங்கள் உள்ளன. அவற்றில் உலக உயிர்கோள காப்பகங்களின் எண்ணிக்கை 10 ஆக அறிவிக்கப் பட்டுள்ளது. கடைசியாக 2016-ம் ஆண்டில் அகஸ்திய மலை இந்தப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளது.


**அபிகோ இயக்கம்**

- சிப்கோ இயக்கத்தைப் போன்று அபிகோ இயக்கம் கர்நாடக மாநிலத்தில் தொடங்கப்பட்டது. இவ்வியக்கம் மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து, கிழக்கு தொடர்ச்சி மலை வரை வனப்பாதுகாப்பு இயக்கமாக செயல்படுகிறது. இது ஒரு முழுமையான பொதுமக்கள் பங்கேற்பு செய்த இயக்கமாகும்.

| வ.எண் | உலக உயிர்கோள காப்பகம் | மாநிலம் | ஆண்டு |
|---|---|---|---|
| 1 | நீலகிரி | தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா | 2000 |
| 2 | மன்னார் வளைகுடா | தமிழ்நாடு | 2001 |
| 3 | சுந்தரவனக் காடுகள் | மேற்கு வங்காளம் | 2001 |
| 4 | நந்தாதேவி | உத்தரகாண்ட் | 2004 |
| 5 | சிம்லிபால் | ஒடிசா | 2008 |
| 6 | பச்மாரி | மத்தியப்பிரதேசம் | 2009 |
| 7 | நோக்ரேக் | மேகாலயா | 2009 |
| 8 | அச்சநக்மார் - அமர்கண்டாக் | சட்டீஸ்கர், மத்தியப்பிரதேசம் | 2012 |
| 9 | கிரேட்டர் நிகோபார் தீவு | அந்தமான் நிகோபார் | 2013 |
| 10 | அகஸ்திய மலை | கேரளா மற்றும் தமிழ்நாடு | 2016 |

**இந்தியாவில் உள்ள பிற உயிர்கோள காப்பகங்கள் பட்டியல்**

| வ. எண் | உயிர்கோள காப்பகம் | மாநிலம் | ஆண்டு |
|---|---|---|---|
| 1 | மானாஸ் | அஸ்ஸாம் | 1989 |
| 2 | திப்ரு | அஸ்ஸாம் | 1997 |
| 3 | திகங் - திபாங் | அருணாசலப்பிரதேசம் | 1998 |
| 4 | கஞ்சன்சங்கா | சிக்கிம் | 2000 |
| 5 | கிரேட் ரான் ஆஃப் கட்ச் | குஜராத் | 2008 |
| 6 | குளிர் பாலைவனம் | ஹிமாச்சலப் பிரதேசம் | 2009 |
| 7 | சேஷாச்சலம் குன்றுகள் | ஆந்திரப் பிரதேசம் | 2010 |
| 8 | பன்னா | மத்தியப் பிரதேசம் | 2011 |



இந்தியாவில் உள்ள தேசிய பூங்காக்கள்

| **உயிர்கோள காப்பகம்** (Biosphere Reserve) | **வன விலங்கு சரணாலயம்** (Wildlife Sanctuary) |
|---|---|
| ஒரு குறிப்பிட்ட சூழல் பகுதியில் உள்ள அனைத்து தாவரங்களுக்கும் மற்றும் விலங்குகளுக்கும் பாதுகாப்பளிப்பது | அழிந்து வரும் அல்லது அருகி வரும் குறிப்பிட்ட வனவிலங்குகளை பாதுகாப்பதற்காக நிர்மானிப்பது |
| அப்பகுதியில் மனிதர்கள் வாழ்வதற்கு அன்றாடச் செயல்பாட்டிற்கும் எந்தத் தடையும் கிடையாது. | மேய்ச்சல் மற்றும் விறகு சேகரித்தல் தவிர மற்ற செயல்பாடுகளுக்குத் தடை விதிக்கப்படும். |
| பரப்பளவில் மிகப்பெரியதாக இருக்கும் சில காப்பகங்களில் ஒன்றிற்கு மேற்பட்ட சரணாலயங்களையும், தேசிய பூங்காக்களையும் உள்ளடக்கியதாக இருக்கும். | பாதுகாக்கும் வனஉலகின் வாழ்விட சூழலை பொறுத்து இதன் பரப்பளவு மாறுபடும். பொதுவாக இது உயிர்க்கோள காப்பகத்தை விடச் சிறியதாகவே இருக்கும். |

### முக்கிய குறிக்கோள்

எஞ்சியுள்ள அயனமண்டல ஈரக்காடுகளை பாதுகாப்பது ஆகும். அழியும் நிலையிலுள்ள பகுதிகளைத் தக்க வைக்கவும், காட்டுப் பொருட்களை சீரான வழியில் சிக்கனமாக உபயோகிக்கவும், காட்டு வளத்தை ஆக்கிரமிப்பு செய்வதால் உண்டாகும் அழுத்தத்தை விடுவிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

**யுனெஸ்கோ**

யுனெஸ்கோ (1977) நிறுவனத்தால் உலகிலுள்ள 120 நாடுகளில் 669 உயிர்கோளப் பாதுகாப்பு மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.